# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

ஆண்டவர் இயேசுவின் உயிர்பின் அனுபவத்தில் இன்னும் இருக்கும் எமக்கு ஆண்டவர் இயேசு உங்களுக்கு துணையாளராகிய தூய ஆவியை அனுப்புவேன் என்றும் அவர் உங்களுக்கு எல்லாவற்றையும் விளங்கப்படுத்துவார் என்றும் உறுதி மொழி கூறி தமது அப்போஸ்தலரை, சீடர்களை திடப்படுத்துவதை இக்காலத்தில் எமக்கு இறைவார்த்தை ஊடாக நாம் அறியக் கூடியதாக உள்ளது. உயிர்ப்பு ஞாயிறு அன்று எமது இலங்கையில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று உயிர்ப்பு ஞாயிறு காலை திருப்பலிக்கு சமூகம் கொடுத்த மக்கள் கொழும்பு புனித கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்திலும், மட்க்களப்பு சீயோன் ஆலயத்திலும், இன்னும் கொழும்பில் கின்சன்பெறி விடுதியிலும், சீனர்விடுதியிலும், சுமாராக 260 மக்கள் இரத்தம் சிந்தி உடல் சிதறி இறந்திருக்கிறார்கள். இவற்றுள் 45 சிறுவர்கள் அடங்கலாக முதியோர்கள், நோய்வாய்பட்டோர், இறந்திருக்கிறார்கள். இது எமக்கு மிகவும் மனவருத்தத்தை தருகின்றது. இக்குண்டு வெடிப்பனால் 500 மேற்பட்டவர்கள் காயமடைந்தும், இழப்புக்களை தாங்க முடியாமல் வேதனைப்படுபவர்கள், மிகவும் அதிகமாக உள்ளார்கள். இதை செய்தவர்கள் மிகவும் திட்டமிட்டு, நீண்ட காலத்து திட்டமிடல் மூலம் இரத்த களரியை அரகேற்றியிருக்கிறார்கள். சமூக வலைத்தள ஊடகங்கள் ஊடாக இதற்கு சூத்திரதாரிகள் யார் என்பதையும் அரசாங்கம் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்தும் இருக்கிறார்கள். இதன் விளைவாகவும் அங்கே மதங்களுக்கிடையில் பிரச்சனையும் கலவரங்களும் நாடுபூராகவும் குறிப்பாக தென் இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பெரிய தாக்குதலை செய்தவர்களை ஆண்டவர் இயேசு சிலுவையில் இருந்து மன்னித்தது போல நாமும் மன்னிக்க வேண்டும். இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும் என்ற இறைவார்த்தை எமக்கு மன்னிப்பின் தூதுவர்களாக எம் கத்தோலிக்க மக்களையும், ஏனையோர்களையும் மாற்ற வேண்டும். மன்னிப்பு என்பது மிகவும் அற்புதமான செயல். இதனூடாக தான் நாம் மனவிடுதலையும், சமூக விடுதலையையும் பெற முடியும். வுன்முறை வன்முறையைதான் கொண்டுவரும். அதுவும் தொடர்வன்முறையை தான் சங்கிலி தொடராக தொடர்ந்து போகும், இதற்குள் மனித விழுமியங்கள், கலாச்சாரங்கள், மனிதத்தன்மைகள் எல்லாமே அழிந்து போகும். மனித குலத்தின் அழிவின் ஆரம்பம் என்று சொல்லலாம். ஆனால் மன்னிப்பு என்பது மனித குலத்தின் வெற்றி. மீட்பு, புதுவாழ்வு, எப்படியும் எமக்கு அடி ஆழத்தில் இப்படி செய்தவர்களை எப்படி மனிக்க முடியும் என்ற மிகவும் பெரிய கேள்வி இருந்து கொண்டே இருக்கும். ஆனால் அதையும் முறியடித்து அவர்களை ( எதிரிகளை, மதம் பிடித்தவர்களை, வெறிபிடித்தவர்களை) மன்னிக்கும் போது ஒட்டு மொத்தமான மனித குலமே ஆசீர்வதிக்கப்படுகின்றது, விடுதலை அடைகிறது. ஒரு பாவி கூட அழிய விடக்கூடாது என்பது இறைவன் திட்டம் உயிர்த்த இயேவின் அனுபவத்திற்குள்ளாலே சென்றவர்கள் இவர்களை கட்டாயம் மன்னிப்பார்கள். அதுவே இக்காலத்தில் நடக்கும் புதுமையாகவும் இருக்கும்.

உயிர்ப்பு ஞாயிற்றுக்கிமை ஆலயத்திலே இப்படியான பெரிய இழப்பை ஏற்படுத்திய இந்த தாக்குதலை ஆண்டவர் இயேசுவே இறைவன் என்று நாம் அறிக்கையிடும் உயிர்த்த ஆண்டவரே தடை செய்திருக்கலாம் என்று பலருடைய மனங்களில் ஆழமாக பதிந்துள்ளது. எல்லாம் வல்லவர், எல்லாம் தெரிந்தவர் இப்படியான சம்பவங்களை ஏன் அனுமதிக்கின்றார்? முதலாவது இறைவனுடைய திட்டம் எதுவென்று முழுமையாக மனிதன் அறிந்து கொள்ள முடியாது. ஆண்டவர் இயேசுவினுடைய போதனையே அயலவரை அன்பு செய், பகைவரை வெறுக்காதே, அவரையும் நேசி, அவர்களுக்காக மன்றாடு, அவர்களும் மனம் மாற வேண்டும் என்பது தான் இறைவனின் விருப்பமும் கூட என்பதை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும். தீமையை வன்முறையை ஒருபோதும் இறைவன் ஏற்றுக் கொள்ள மாட்டார். அதற்காகவும் உடன் போக மாட்டர். தீமை என்பது நல்லது, நன்மை இருக்க வேண்டிய இடத்தில் நன்மை இல்லாது இருப்பது தான் தீமை. வன்முறை என்பது அன்பு இல்லாத நிலை தான் தீமை. வன்முறை ஆகவே இவை தீமையும் வன்முறையும் மனிதர்களால் ஏற்படுத்த பட்டது என்பது தான் உண்மை. ஆகவே இந்த வன்முறைகள், தீமைகள் எல்லாம் மனிதர்களால் ஏற்படுத்த படுவதே அன்றி இறைவனால் அல்ல என்பதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இவை அனைத்திற்கும் முழுக்க முழுக்க தீமை செய்வோரும், வன்முறையில் ஈடுபடுவோருமே பொறுப்பு என்பதை ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே தான் தீமையும் வன்முறையும் உலகத்திலே தாண்டவமாடுகிறது. ஆதனால் இவை ஒருகாலமும் வெற்றி பெற முடியாது. நன்மையே வெல்லும். அன்பே வெற்றியடையும், ஏனென்றால் “அன்பே கடவுள். கடவுளே அன்பு”

**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest**
**Our Lady of Deliverance Tamil Catholic Mission**